**MCOP. 73/2022**

**நாள்.29.01.2026.**

**ம.சா. 1– ராமநாதன்**

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் இராமநாதபுரம் நீதிமன்றத்தில் வேலை பார்த்து ஓய்வுபெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். நான் மாதம் ரூ.25 ஆயிரம் ஓய்வூதியம் பெற்றுவருகிறேன் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை கிழமேல் சாலை என்றால் சரிதான். அந்த ரோடு அகலம் குறைவான ரோடு என்றால் சரிதான். அந்த சாலையில் ஒரே நேரத்தில் இரண்டு வாகனங்கள் எதிரெதிரே வேகமாக செல்லமுடியாது என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு இரண்டுபக்கமும் கடற்கரை மணல்போல் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். அதனால் கொஞ்சம் மணற்பகுதியில் இறங்கினாலும் வாகனம் கவிழ்வதற்கு வாய்ப்புண்டு என்றால் சரிதான். எனக்கு விபத்தில் தலைக்காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியாமல் சென்றதால்தான் தலைக்காயம் ஏற்பட்டது என்றால் நான் தலைக்கவசம்அணிந்திருந்தேன். தலைக்கவசம் அணிந்திருந்தால் எனக்கு தலைக்காயங்கள் ஏற்பட்டிருக்காது என்றும், வழக்கிற்காக தலைக்கவசம்அணிந்திருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே இதேநீதிமன்றத்தில் விபத்து சம்மந்தமாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான், தற்போதும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டதால்தான் நான் தெம்பாக இதே நீதிமன்றத்தில் இரண்டுமுறை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய இருசக்கரவாகனத்தை ஓட்டிய நபருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் 3ம் எதிர்மனுதார்காப்பீடு உரிமம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் பாலிசி விதிமுறைகளை மீறி இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதால் 3ம் எதிர்மனுதார் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதார் வாகனத்தை

ஓட்டிய நபர் காரணம் என இந்நீதிமன்றம் முடிவு செய்தால் 1ம் எதிர்மனுதாரரே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், 3ம் எதிர்மனுதார் நிறுவனம் கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல, இரண்டுபேரும் கொடுக்க கடமைப்பட்டவர்கள். நான் மருத்துவ காப்பீட்டுக்கு பணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கள் அதிகம் என்றும், அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.